5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக்கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக்கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. செல்வராஜ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக்கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்தாறாவது, நூற்று ஐம்பத்தேழாவது, நூற்று ஐம்பத்தெட்டாவது, நூற்று ஐம்பத்தொன்பதாவது ஆகிய நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகச் சட்டமன்றப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. இராம. இராமநாதன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவையினுடைய தலைவரவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொற்பாதம் பணிந்து 1994—95ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக, குழுவின் இருநூற்று இருபத்தெட்டு மற்றும் இருநூற்று இருபத்தொன்பதாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

6. அறிவிப்புகள்

(அ) முன்பண மானியக் கோரிக்கைகள், 1995-96, மொழிதல் (ஆ.செ)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1995—96-ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

"In pursuance of Clause (2) of Article 206, read with Clause (3) of Article 203 of the Constitution of India,